# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 09 வியாழக்கிழமை 25.09.2025 கதிர் 320




# பாலஸ்தீனத்தை சுதந்திர தனி நாடாக அங்கீகரிப்பதாக ஜனாதிபதி தெரிவிப்பு



கொழும்பு, செப் .25

ஊழலுக்கு எதிரான போராட்டம் ஆபத்தானது என்றாலும், அதை எதிர்த்துப் போராடாமல் இருப்பது இன்னும் ஆபத்தானது என்று ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

ஊழலுக்கு எதிரான போராட்டம் உலகின் ஒவ்வொரு நாட்டின் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக மாற வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 80வது பொதுச் சபை அமர்வில்உரையாற்றிய போது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இந்தக் கருத்தை வெளியிட்டார். போதைப்பொருள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்குழுக்கள் இன்று உலகின் புதிய பிரச்சினையாக மாறிவிட்டதாக ஜனாதிபதி தெரிவித்தார். ஐக்கிய நாடுகள் சபையின் 80வது பொதுச் சபை அமர்வில் உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, பாலஸ்தீனத்தை ஒரு சுதந்திர நாடாக அங்கீகரிப்பதாகவும், இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்திற்கும் இடையிலான மோதலை முடிவுக்குக் கொண்டுவர அனைத்து ஆதரவையும் வழங்குவதாகவும் மேலும் கூறினார்.

(ஐ)

## தமிழ் மக்களுக்கு சர்வதேச நீதி கோரி

# தொடர் உண்ணாவிரதப் போராட்டம் யாழ்ப்பாணத்தில் இன்று ஆரம்பம்!




யாழ்ப்பாணம், செப். 25

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் தமிழ் மக்களுக்கு சர்வதேச நீதி கோரி சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமானது.

இந்தப் போராட்டம் யாழ். செம்மணிப் பகுதியில் இன்று வியாழக்கிழமை காலை ஆரம்பமாகிய நிலையில் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

7

# லொறி – வான் மோதி நால்வர் உயிரிழப்பு!




அனுராதபுரம், செப். 25

குருநாகல் - அனுராதபுரம் பிரதான வீதியில் தலாவ - மீரிகம சந்தியில் லொறி

7

# 7 பௌத்த துறவிகள் கோர விபத்தில் பலி!

## நேற்று இரவு குருநாகலில் சம்பவம்



குருநாகல், செப். 25

குருநாகல் - மெல்சிரிபுரவின் பன்சியாகமவில் உள்ள பௌத்த வன ஆச்சிரமமான நா உயன ஆரண்ய சேனாசனத்தில் இடம்பெற்ற கேபிள் கார் விபத்தில் 7 பௌத்த பிக்குகள் உயிரிழந்துள்ளனர்.

நேற்று இரவு 9 மணியளவில், புனித

7

# பொலிஸ் கான்ஸ்டபிள் வீதி விபத்தில் மரணம்!




கொழும்பு, செப். 25

கொழும்பில் இருந்து கண்டி நோக்கிப் பயணித்த லொறி ஒன்று, எதிர்த் திசையில் இருந்து வந்த மோட்டார் சைக்கிள் மீது மோதி விபத்துக்குள்ளானதில் பொலிஸ் கான்ஸ்டபிள்

7

# பொலிஸ் விசேட அதிரடிப் படையைக் கண்டு தப்பிச் சென்ற நபர் கிணற்றில் வீழ்ந்து சாவு!



கிளிநொச்சி, செப். 25

கிளிநொச்சியில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரிடமிருந்து தப்பிச் செல்ல முற்பட்ட நபர் கிணற்றில் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இராமநாதபுரம் பொலிஸ்

7



## போதைப்பொருள் லொறிகள் கைதானவர்களை தடுத்து வைத்து விசாரிக்க அனுமதி

கொழும்பு, செப் .25

தங்காலை சீனிமோதர பகுதியில் மூன்று லொறிகளில் ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்களை, தடுத்து வைத்து விசாரிக்க தங்காலை நீதவான் நீதிமன்றம் பொலிசாருக்கு அனுமதி அளித்துள்ளது.

போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு லொறிகளின் உரிமையாளர்கள் இருவர் மற்றும், வைத்தியசாலையில் உயிரிழந்த உனகுருவே துசித்தவின் மகன் ஆகியோர், நேற்று (24) இரவு தங்காலை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன் போது, சந்தேக நபர்களை தடுத்து வைத்து விசாரிக்க பொலிசார் நீதிமன்றத்திடம் அனுமதி கோரியிருந்த நிலையில், அவர்களை 29ஆம் திகதி வரை காவலில் எடுத்து விசாரிக்க நீதவான் உத்தரவிட்டார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்ட லொறி ஒன்றின் உரிமையாளரையும் அதன் சாரதியையும், எதிர்வரும் 29ஆம் திகதி வரை காவலில் எடுத்து விசாரிக்க நீதிமன்றம், நேற்று முன்தினம் உத்தரவிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# குழந்தையை மறைத்து வைத்த பெண் சிற்றூழியர்

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை பிரிவின், மலச்சல கூடத்தில் குழந்தையை பிரசவித்து குழந்தையை கட்டிலின் கீழ் மறைத்து வைத்திருந்த, 35 வயதுடைய இரு பிள்ளைகளின் தாயான சுகாதார சிற்றூழியர் ஒருவர், நேற்று முன்தினம் (23) கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை பிரிவில் கடமையாற்றி வரும் சிற்றூழியரான இந்தப் பெண், திருமணமான இரண்டு பிள்ளைகளின் தாயார் என தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தன்று ( 22), அவர் வழமைபோல் வைத்தியசாலையில் கடமையாற்றி வந்தார். இதன் போது, வயிற்று வலி ஏற்பட்டதால் அங்குள்ள மலச்சல கூடத்திற்குச் சென்று, யாருக்கும்தெரியாமல் ஒரு பெண் குழந்தையைப் பிரசவித்தார்.

பிறகு, அக்குழந்தையைப் பெட்டி ஒன்றில் மூடி, கட்டிலின் கீழ் மறைத்து வைத்துவிட்டு, தனது கடமைகளைத் தொடர்ந்தார்.

இந்நிலையில், அவருக்கு இரத்தப்போக்கு அதிகரித்ததை அவதானித்த தாதியர் ஒருவர், அவரை வார்டில் அனுமதிக்கச் செய்தார்.

அங்கு சோதனை செய்த வைத்தியர்கள், அவர் குழந்தைப்பெற்றுள்ளதை கண்டறிந்தனர்.

அதனையடுத்து, தேடியபோது, பெட்டியில் போடப்பட்டு கட்டிலின் கீழ் மறைக்கப்பட்டிருந்த குழந்தை, உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டது.

குறித்த சிற்றூழியரின் கணவரும், குறித்த வைத்தியசாலையில் சிற்றூழியராகவே கடமையாற்றி வருகிறார்.

இருவருக்கும் இடையே ஏற்பட்ட மனக்கசப்பு காரணமாக, கணவன் கடந்த ஜூன் மாதத்திலிருந்து பிரிந்து வாழ்ந்து வருகிறார்.

இந்நிலையில், அவர் கர்ப்பம் தரித்திருந்தது வைத்தியசாலையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கோ அல்லது யாருக்கோ தெரியவில்லை.

38 வாரங்கள் முழுமையான கர்ப்பத்தில், 2 கிலோ 485 கிராம் எடையுள்ள பெண் குழந்தையை அவர் பிரசவித்திருந்தார்.

இச்சம்பவத்தையடுத்து, வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் அவரைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

பொதுமக்கள் இச்சம்பவத்தால் பெரும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இதேவேளை, உயிரிழந்த குழந்தையின் மாதிரிகள், மேலதிக பரிசோதனைக்காக கொழும்பு பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன.

பிரிந்த கணவன் “அக்குழந்தை தனக்குப் பிறக்கவில்லை” எனத் தெரிவித்ததையடுத்து, குழந்தையின் மற்றும் தந்தையின் இரத்த மாதிரிகளைப் பெற்று, டிஎன்ஏ பரிசோதனை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை, மட்டக்களப்பு தலைமையக பெரும் குற்றத் தடுப்புப் பிரிவு (CID) பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.(ஐ)



## வெறுமனே வாய்ப்பேச்சால் ஆட்சி செய்வதே தற்போதைய அரசாங்கம் பொய்கூறி மக்களை ஏமாற்றுகிறது சபையில் நாமல் வெளிப்படை!



அதிகளவில் பொய்கூறி மக்களை ஏமாற்றும் அரசாங்கமாக நீங்கள் இப்போது மாறியிருக்கிறீர்கள். உங்களுடைய அரசாங்கம் வெறுமனே வாய்ப்பேச்சால் ஆட்சியை செய்யும் அரசாங்கமாக மாறியுள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் இன்று இடம்பெற்ற அமர்வில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

குடுவை வைத்து ஆட்சி நடத்தும் அரசாங்கம், போதைப்பொருளை வைத்து ஆட்சி செய்கின்றீர்கள். உங்கள் குறைகளை வைத்துக்கொண்டு நீங்கள் மற்றவர்களை குற்றஞ்சாட்டிக்கொண்டு செல்கின்றீர்கள்.

பிற்பாக்கெட்டை அடித்துக்கொள்பவர்களைக்கள்ளர் என்று தான் சொல்லுவார்கள். அதேபோன்று தான் நீங்களும் செயற்படுகின்றீர்கள். ஆகவே அரசாங்கம் என்ற போர்வைக்குள் திருடர்களை நீங்கள் பாதுகாக்க வேண்டாம். எங்கள் மீது வைக்கின்ற குற்றச்சாட்டை ஒரு விரல் சுட்டிக்காட்டினால் உங்கள் மீதான குற்றச்சாட்டை நான்கு விரலும் சுட்டிக்காட்டுகின்றது.

சர்சைக்குரிய கொள்கலன் தொடர்பில் கதைத்த அர்ச்சுனா சி.ஐ.டிக்கு அழைக்கப்பட்டார்.அதற்கு நீங்கள் எடுத்த நடிவடிக்கைகள் யாவை? பழைய ஆட்சி முடிந்து விட்டது. அதை வைத்து ஆட்சி நடத்தாதீர்கள். உளவு அறிக்கை வந்தபோதும் ஏன் அந்த இரண்டு கொள்கலனையும் கைப்பற்றவில்லை என்றவாறான கேள்விகளை முன்வைத்துள்ளார்.(ஐ)

## தியாக தீபம் திலீபன் நினைவு நாள் வவுனியாவில் அடையாள உண்ணாவிரதப் போராட்டம்!



தியாக தீபம் திலீபனின் 38 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு வவுனியாவில் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் ஏற்பாட்டில் வவுனியா மாநகரசபை முன்றலில் அமைந்துள்ள பொங்குதமிழ் நினைவுத் தூபியில் அமைக்கப்பட்ட தியாக தீபம் திலீபனிக் நினைவுத் திடலில் குறித்த உண்ணாவிரதப் போராட்டம் இன்று இடம்பெற்றது.

ஐந்தம்ச கோரிக்கைய முன்வைத்து தியாக தீபம் திலீபன் உண்ணாநோன்பிருந்து உயிர்நீத்து 38 ஆண்டுகள் கடந்த நிலையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படத்திற்கு மலர்தூபி, தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், அடையாள உண்ணாவிரதமும் மேற்கொள் ளப்பட்டது.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேநதிரன், மாநகர மேயர் சு.காண்டீபன் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், தமிழ் தேசிய மக்கள் முன்னனியினர், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

## யாழ். மல்லாகம் பெண் நீதவானின் பதவி நீக்கம்- வெளியான காரணம்!

யாழ். மல்லாகம் நீதிமன்ற கௌரவ நீதிவான் சுபறாஜினி ஜெகநாதன் நேற்றையதினம் (24) பதவி நீக்கம் செய்யப்பட்டார். கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த நீதவான் சுபராஜினியின் கணவனான ஜெகநாதன் ஒரு சிரேஸ்ட சட்டத்தரணியாவார். சுபராஜினி சட்டத்துறை கற்கை நெறியைப் பூர்த்தி செய்த பின்னர் சட்டத்தரணியாக ஜெகநாதனிடமே பயிற்சி பெற்று வந்தார். இவர்கள் இருவரும் திருமணம் முடித்து கொண்டனர். இந்த நிலையில் நீதவானாக பரீட்சையில் சித்தி பெற்ற பின்னர் சுபறாஜினியை அவரது கணவன் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்து தானே நீதவான் போல் பிணக்குகளுக்கு தீர்ப்புகள் வழங்க ஆலோசனை கொடுத்து வந்துள்ளதாகத் தெரியவருகின்றது. சுபராஜினி நீதவானின் உத்தியோகபூர்வ விடுதியில் தங்கியிருந்து கொண்டு சட்டத்தரணியான அவரது கணவன் ஜெகநாதன், பல வழக்குகளுக்கு சட்டத்தரணிகளிடம் பேரம் பேசி பணம் பெற்று தீர்ப்பு வழங்க சுபராஜினிக்கு ஆலோசனை கொடுத்து தீர்ப்புகளை மாற்ற வைத்ததாகவும் தெரியவருகின்றது. அத்துடன் நீதவானின் உத்தியோகபூர்வ இல்லத்தில் தங்கியிருந்து கொண்டு வெளிமாவட்டங்களில் உள்ள பிணக்குகளையும் மல்லாகம் நீதவான் அதிகார எல்லைக்குள் இருந்து பொலிசார் மூலம் தலையிட்டு வந்ததாகவும் தெரியவருகின்றது. இவ்வாறான செயற்பாடுகள் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்ட நிலையில் நீதவான் சுபறாஜினியின் பதவியை நீதிச் சேவை உயர்பீடம் பறித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

## யானை தாக்குதலில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

மட்டக்களப்பு, செப் .25

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொண்டுகள்சேனை, பூலாக்காடு, சீல்லிக்கொடி பகுதியில் உள்ள கழி ஒன்றில் மீன்பிடிக்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் யானைத் தாக்குதலில் உயிரிழந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

பெரிய வேதம், பூலாக்காடு, கிரான் பகுதியைச் சேர்ந்த 63 வயதுடைய எட்டு பிள்ளைகளின் தந்தையான மூத்த தம்பி சீனித்தம்பி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் சம்பவ தினமான நேற்று முன்தினம் (23) காலை தனது வீட்டிலிருந்து பூலாக்காடு, சீல்லிக்கொடி பகுதியில் உள்ள கழி ஒன்றில் மீன்பிடிப்பதற்காகச் சென்றவர், இரவாகியும் வீடு திரும்பவில்லை.

இதனையடுத்து, அவரை உறவினர்கள் தேடிச் சென்றபோது, இன்று காலை யானைத் தாக்குதலில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து, வாழைச்சேனை நீதவான் நீதிமன்ற உத்தரவுக்கமைய, சம்பவ இடத்திற்குச் சென்ற கோறளைப்பற்று திடீர் மரண விசாரணை அதிகாரி வடிவேல் ரமேஷ் ஆனந்தன் மற்றும் பொலிஸார் சடலத்தைப் பார்வையிட்டு, பிரேத பரிசோத னைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸ ாருக்கு உத்தரவிட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## அவுஸ்திரேலிய பிரதமருடன் ஜனாதிபதி சந்திப்பு






## உலகின் சிறந்த சுற்றுலா தலமாக இலங்கை தெரிவு

கொழும்பு, செப் .25

பிரிட்டிஷ் பயண இதழான 'டைம் அவுட்' வெளியிட்ட சமீபத்திய அறிக்கையின்படி, ஒக்டோபர் மாதத்தில் உலகின் சிறந்த சுற்றுலா தலமாக இலங்கை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வெப்பமண்டல காலநிலை, பண்பாட்டு பாரம்பரியம் மற்றும் இயற்கை அழகு ஆகியவை இந்தத் தேர்வில் முக்கிய காரணங்களாகக் கருதப்பட்டுள்ளன.

நாடு முழுவதும் பரவியுள்ள கவர்ச்சிகரமான கடற்கரைகள், மலைப்பயண வாய்ப்புகள், பண்டைய இடிபாடுகள் மற்றும் வனவிலங்கு சஃபாரிகள் ஆகியவை இலங்கையை உலகின் முதன்மையான சுற்றுலா தலமாக உயர்த்தியுள்ளன.

இந்தத் தரவரிசை, ஒக்டோபர் மாதத்தில் அனுபவிக்கக்கூடிய பருவகால வசீகரம், கலாச்சார நிகழ்வுகள் மற்றும் தனித்துவமான அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டதாக 'டைம் அவுட்' இதழ் குறிப்பிட்டுள்ளது. இந்தப் பட்டியலில் துருக்கி இரண்டாம் இடத்தையும், அமெரிக்காவின் நியூ மெக்ஸிகோ மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

மற்ற முக்கிய சுற்றுலா தலங்களாக ஸ்பெயினின் வலென்சியா, அமெரிக்காவின் நியூயோர்க், பிலிப்பைன்ஸ், பூட்டான், போஸ்னியா மற்றும் ஹர்ஸகொவினா, ருமேனியாவின் டிமிசோரா, அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ மற்றும் நமீபியா ஆகியவை இடம்பெற்றுள்ளன. (ஐ)

# லடாக் விவகாரத்தை உணர்வுபூர்வமாக அனுக வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தல



லடாக் விவகாரத்தை உணர்வுபூர்வமாக அணுக வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியுள்ளது. லடாக்கிற்கு மாநில அந்தஸ்து கேட்டு லே நகரில் திடீரென இளைஞர்கள் வன்முறையில் ஈடுபட்டனர். லேவில் உள்ள பாஜக அலுவலகம், காவல் வாகனங்களுக்கு போராட்டக்காரர்கள் தீ வைத்தனர். பாதுகாப்பு வீரர்கள் தாக்கப்பட்டனர். இந்த வன்முறையில் 4 பேர் பலியாகி விட்டனர். 70 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். லடாக்குக்கு மாநில அந்தஸ்து கோரி நேற்று நடந்த போராட்டத்தில் வன்முறை வெடித்ததால் பதற்றம் நிலவியது.

லே பகுதியில் நிலவும் பதற்றத்தை தணிக்க மாவட்ட ஆட்சியர் 163 தடை உத்தரவு பிறப்பித்தார். லே பகுதியில் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி போராட்டம் நடத்தவோ, ஒன்று கூடவோ கூடாது என உத்தரவிட்டார். இன்றும் 163 தடை உத்தரவு தொடர்கிறது. இதனிடையே லடாக்கில் நிலைமை கட்டுக்குள் இருக்கிறது என்று உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்நிலையில் லடாக் விவகாரத்தை உணர்வுபூர்வமாக அணுக வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியுள்ளது (ஐ)

## மறைந்த ஐஏஎஸ் அதிகாரி பீலா வெங்கடேசன் உடலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் அஞ்சலி



உடல்நலக்குறைவால் காலமான ஐஏஎஸ் அதிகாரி பீலா வெங்கடேசன் உடலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அஞ்சலி செலுத்தினார். தமிழக அரசில் எரிசக்தி செயலாளராக இருந்தவர் பீலா வெங்கடேசன். இவர் உடல்நலக்குறைவு காரணமாக தரமணியில் உள்ள அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். புற்றுநோய் பாதிப்பு காரணமாக சிகிச்சை பலனின்றி இருந்த பீலா வெங்கடேசன் நேற்று உயிரிழந்தார். அவரது உடல் நீலாங்கரையில் உள்ள வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இந்நிலையில் மறைந்த பீலா வெங்கடேசன் உடலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அஞ்சலி செலுத்தினார்.

பீலா வெங்கடேசன் குடும்பத்தினரை சந்தித்து முதலமைச்சர் ஆறுதல் தெரிவித்தார். துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமை செயலாளர். அமைச்சர்கள் உள்ளிட்டோரும் அஞ்சலி செலுத்தினர். ஐஏஎஸ் அதிகாரி பீலா வெங்கடேசனின் உடலுக்கு அரசு உயர் அதிகாரிகள் பலர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். ஐஏஎஸ் அதிகாரிகள் அமுதா, ககந்தீப் சிங் பேடி உள்ளிட்டவர்களும் பீலா வெங்கடேசன் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர். அவரது இறுதிச்சடங்கு சென்னையில் இன்று பிற்பகல் 3 மணியளவில் நடைபெறுகிறது. (ஐ)

## தமிழக எரிசக்தித்துறை முதன்மை செயலாளர் பீலா வெங்கடேசன் மறைவுக்கு அதிமுக முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் இரங்கல்


தமிழக எரிசக்தித்துறை முதன்மை செயலாளர் டாக்டர் பீலா வெங்கடேசன் (55) உடல்நலக் குறைவு காரணமாக சென்னையில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில், இன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இவரது மறைவுக்கு அதிமுக முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முன்னால் அமைச்சர் விஜயபாஸ்கரின் சமூக வலைதள பதிவில்:

தமிழ்நாடு அரசின் எரிசக்தி துறையின் முதன்மைச் செயலாளர் டாக்டர். பீலா வெங்கடேசன் ஐயுளு அவர்கள் உடல்நலக்குறைவால் மறைவெய்திய செய்தி மிகுந்த அதிர்ச்சியையும், வேதனையையும் அளிக்கின்றது.” (ஐ)

## குலசேகரன்பட்டினம் தசரா விழாவில் ஆபாச நடனமா? கண்காணிப்பு குழு அமைக்க ஐகோர்ட் கிளை உத்தரவு!!





குலசேகரன்பட்டினம் தசரா விழாவில் ஆபாச நடனம் இடம்பெறுகிறதா என ஐகோர்ட் கிளை கேள்வி எழுப்பியுள்ளது. திருச்செந்தூரை சேர்ந்த ராம்குமார் ஆதித்தன், உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்த மனுவில் திருச்செந்தூர் குலசேகரப்பட்டினம் கடற்கரையில் முத்தாரம்மன் திருக்கோவில் அமைந்துள்ளது. இக்கோவிலில் மைசூருக்கு அடுத்த படியாக தசரா திருவிழா மிகப்பெரிய அளவில் கொண்டாடப்பட்டு வருகிறது. முத்தாரம்மன் கோவிலில் 12 நாட்கள் தசரா திருவிழாவில் தமிழகம் முழுவதும் இருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு நேர்த்திக் கடன், சிறப்பு வழிபாடுகளை செய்வார்கள். கோவில் பாரம்பரியத்தின்படி பக்தர்கள், இளம் குழந்தைகள், பெண்கள் மற்றும் ஆண்கள் என அனைத்து வயதினரும் காளி, சிவன், அரசர்கள், குரங்குகள், யமன், புலி, வேடன் காவலர், ஆண்கள், பெண்கள் போன்று தங்கள் வேண்டுதலுக்கு ஏற்ப வேடமிடுவர்.

பின்னர் 48 நாட்கள் வரை விரதம் இருந்து பக்தர்களிடம் காணிக்கை பெற்று தசரா இறுதி நாளில் முத்தாரம்மன் கோயிலுக்குச் சென்று காணிக்கையைச் செலுத்துவர். கடந்த 20 ஆண்டுகளாக அதிக காணிக்கை வசூலிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் சினிமா பாடல்கள் என்ற பெயரில் குத்து பாடல்களுக்கு நடனக்கலைஞர்கள் ஆபாசமான மற்றும் கொச்சையான நடனங்களை ஆடுவது பக்தர்களின் மனதை புண்படுத்துகிறது.

இதுகுறித்து 2017ல் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு, தசரா விழாவில் அரை குறை ஆடைகளுடன் ஆடுபவர்களுக்கு ஆடைக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. இருப்பினும் ஆபாசமான பாடல்களுக்கு ஆடுவது தொடர்கிறது. கடந்த 2023-ல் ஆடல் பாடல் நிகழ்ச்சி தொடர்பான வழக்கில் கோயில் விழாக்களில் நடைபெறும் கலை நிகழ்ச்சி, கோயில் தொடர்பானதாக இருக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டது. இதை 2023, 2024 தசரா விழாவில் தசரா குழு பின்பற்றவில்லை. எனவே, தசரா குழுவினர் ஆபாசமான பாடல்கள் பாடவும் ஆடவும் அனுமதிக்க தடை விதித்தும், கடந்த 2023ல் பிறப்பித்த உத்தரவை அமல்படுத்தவும் உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது. இந்த மனுவை நீதிபதிகள் அனிதா சுமந்த், சி.குமரப்பன் அமர்வு விசாரித்து கலை நிகழ்ச்சியில் பங்கேற்போர் மது அருந்தக்கூடாது. குலசேகரபட்டினம் வட்டாட்சியர், காவல் ஆய்வாளர், உள்ளூரைச் சேர்ந்த தலா ஒரு முதியவர், இளைஞர், பெண் என 5 பேர் கொண்ட சிறப்புக் கண்காணிப்பு குழு அமைக்க வேண்டும். ஆபாச நடனம் ஆடுவது உள்ளிட்ட விதிமீறல்கள் உள்ளதா? என்பதை இக்குழு ஆய்வு செய்து, நீதிமன்றத்தில் அறிக்கையாகத் தாக்கல் செய்ய வேண்டும். விசாரணை அக்.9க்கு தள்ளிவைக்கப்படுகிறது என நீதிபதிகள் உத்தரவிட்டனர். (ஐ)

## ராமதாஸுக்கு பாதுகாப்பை அதிகரிக்கக் கோரி தலைமைச் செயலாளரிடம் மனு அளிக்க முடிவு





விழுப்புரம் பாமக நிறுவனர் ராமதாஸுக்கு பாதுகாப்பை அதிகரிக்கக் கோரி தலைமைச் செயலாளரிடம் மனு அளிக்க முடிவு செய்துள்ளனர். பாமக நிறுவனர் ராமதாசுக்கும், அன்புமணிக்கும் இடையே ஏற்பட்டுள்ள அதிகார மோதலால் அன்புமணியை கட்சியை விட்டே நீக்கி ராமதாஸ் உத்தரவிட்டார். இந்நிலையில், கட்சியையும் சின்னத்தையும் கைப்பற்றுவதில் இரு தரப்புக்கும் இடையே கடும் போட்டி நிலவி வருகிறது. பாமக தலைவராக அன்புமணியை தேர்தல் ஆணையம் ஏற்றுக் கொண்டதாகவும், மாம்பழம் சின்னம் தங்களுக்கே சொந்தம் எனவும் அன்புமணி தரப்பு செய்தி தொடர்பாளர் வழக்கறிஞர் பாலு தெரிவித்திருந்தார்.

ஆனால் இதற்கு மறுப்பு தெரிவித்த ராமதாஸ் தரப்பை சேர்ந்த அருள் எம்எல்ஏ தேர்தல் ஆணையத்தின் அறிக்கையில் எந்த இடத்திலும் அன்புமணி கட்சி தலைவர் என்று குறிப்பிடவில்லை என கூறியிருந்தார். இதுசம்பந்தமாக தேர்தல் ஆணையத்தில் மனு அளித்துள்ளதாகவும் அவர் கூறியிருந்தார். இப்படி இரண்டு தரப்பினரும் தேர்தல் கமிஷனில் மல்லுகட்டி வரும் சூழ்நிலையில் ராமதாஸ/க்கு பாதுகாப்பை அதிகரிக்கக் கோரி தலைமைச் செயலாளரிடம் மனு அளிக்க முடிவு செய்துள்ளனர். அன்புமணி ஆதரவாளர்களால் அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறி பாதுகாப்பை அதிகரிக்க மனு அளிக்க உள்ளனர். பாமக எம்எல்ஏ அருள் மற்றும் ஆதரவாளர்கள், தலைமை செயலரிடம் மனு அளிக்க உள்ளனர். 3 காவலர்கள் பாதுகாப்புக்கு உள்ள நிலையில் காவலர்களை அதிகரிக்க பிற்பகலில் மனு அளிக்கப்பட உள்ளது. (ஐ)



**பின்தங்கிய நாடான ஆ.்.ப்கானிஸ்தானின் தலிபான் அரசு, பெண்கள் அழகு நிலையங்களை மூட ஆணை பிறப்பித்தது. பெண்கள் எழுதிய நூல்களுக்கும் அங்கே தடை. வளர்ந்த நாடுகளிலோ இன்றும் தரையை சுத்தம் செய்ய, அடுப்படியைச் சுத்தம் செய்ய, குழந்தைகளுக்கு மதிய உணவு தயார் செய்ய என்று வரும் விளம்பரங்களில் பெண்கள்தான் முன்னிலைப்படுத்தப்படுகிறார்கள். உலகின் வல்லரசான அமெரிக்காவில், இன்றும் கருக்கலைப்பு உரிமைக்காக, பெண்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள். வளர்ந்த நாடுகளில் பெண்களின் நிலை இதுவென்றால், இந்தியாவில் கேட்கவே வேண்டாம். நூறு வருடங்களுக்கு முன் பெண்கள் எதற்காகவெல்லாம் போராடினார்களோ, அதிலிருந்து எவ்வளவு தூரம் முன்னேறி இருக்கிறார்கள் என்பதே கேள்விக்குறி. அன்றைய காலகட்டத்தைவிட இப்போது பெண்கள் கல்வியிலும் வேலைவாய்ப்புகளிலும் பெருமளவிற்கு முன்னேறி இருக்கிறார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.**

# எந்த நாடும் முன்னேறவில்லை!

16 செப் 2025 அன்று மெக்ஸிகோ தன் சுதந்திர தினத்தை கொண்டாடியது. இதில் சிறப்பு என்னவென்றால், மெக்ஸிகோ சுதந்திரம் அடைந்த இந்த 215 ஆண்டுகளில், முதன்முறையாக ஒரு பெண் பிரதமர் சுதந்திரதின கொண்டாட்டத்தை மேளம் முழங்க, தொடங்கிவைத்தார்.

முதல் பெண் மருத்துவர், முதல் பெண் விஞ்ஞானி, முதல் பெண் விமான ஓட்டுநர் என முதல் பெண் பட்டியல் நீண்டுகொண்டே போகும். எங்காவது முதல் ஆண் என்று கேள்விப்பட்டதுண்டா? முதல் மனிதன் என்று சொல்வதுண்டு. ஆனால் முதல் ஆண் என்று சொல்வது கிடையாது. அதே சமயம், முதல் கறுப்பினத்தவர், முதல் இந்த சாதியை சேர்ந்தவர், முதல் ஏழை என்று சொல்லக் கேட்டிருக்கலாம். இவை எல்லாமே இன, வர்க்க, பாலின அடுக்குமுறைகளே.

எந்த இனம், மொழி, தேசம், மதம், ஜாதியாக இருந்தாலும், அனைத்து ஒடுக்குமுறைக்கு உள்ளேயும் ஒடுக்குமுறைக்கு உள்ளாவது பெண்கள்தான். இங்கிலாந்து பேரரசு இந்தியாவை ஆண்ட பொழுது, இந்திய ஆண்களுக்கு வேண்டுமானால் வெள்ளைக்காரப் பெண்கள் மேலானவர்களாக இருந்திருக்கலாம். ஆனால் அவள் குடும்பத்தில் அவள் ஒடுக்கப்படுபவளாகவே இருந்திருக்கிறாள். இது எல்லா அடுக்குகளிலும் பொருந்தும்.

தங்கள் துறையில் வெற்றிபெற்ற பெண்களிடம் தவறாமல் கேட்கப்படும் ஒரு கேள்வி, 'வீட்டை கவனித்துக் கொண்டே எப்படி உங்கள் துறையில் வெற்றி அடைந்தீர்கள்?' என்பதே. 'இதே கேள்வியை ஒரு ஆணிடம் ஏன் கேட்பதில்லை' என்று பதில் கேள்வி பெண்ணிய புரிதலோடு இருக்கும் பெண்களால் கேட்கப்படுவதுண்டு.

சில சமயங்களில் அப்படி கேட்கப்படும் கேள்விகூடத் தவறில்லை எனலாம். இரண்டு காரணங்கள். முதலாவது, வீட்டு வேலை, பிள்ளைகளை பராமரிப்பது என்பது பெண்களுக்கான வேலை. எவ்வளவு பெரிய துறையில் பெரும் சாதனை படைத்திருந்தாலும், வீட்டில் வேளைக்கு ஆள் இருந்தாலும், அந்த ஆட்களை நிர்வகிப்பது பெண்களின் வேலை. இதுதான் எதார்த்தம். அந்த அடக்குமுறையில் இருந்துகொண்டே எப்படி சாதித்தார்கள் என்பதை அறிந்தால், அது மற்ற பெண்களுக்கும் ஒரு உந்துதலாக இருக்கும்.

இரண்டாவதாக, இன்னொரு கேள்வி பெண்களிடம் கேட்டகப்படுவதுண்டு. 'நீ இங்கு வந்துவிட்டாயே. வீட்டில் யார் சமைப்பார்கள், குழந்தைகளை யார் பார்த்து கொள்வார்கள்? வரும் பொழுதே சமைத்து வைத்துவிட்டு வந்தாயா?' என்பதுதான். முதலில் கேட்கப்படும் கேள்விகூட ஒடுக்குமுறைக்கு ஆளான பெண்கள் சாதனையை பறைசாற்றுவதாகக்கூட எடுத்து கொள்ளலாம். இரண்டாவதாகக் கேட்கப்படும் கேள்விதான் 'நீ உன் கணவனுக்கு கீழ்' என்பதை நினைவூட்டும் கேள்வி. இது போன்ற தங்கள் துறையில் சிறந்து விளங்கும் பெண்களிடம் கேட்கப்படும் சில கேள்விகளை ஆண்களிடம் கேட்டபொழுது, அவர்கள் நெளிந்ததிலேயே தெரிந்தது அவை எல்லாம் எவ்வளவு அநாகரீக கேள்விகள் என்று.



அப்படி கேட்கப்பட்ட சில கேள்விகள் 'நீங்கள் ஆண் என்பதால் இந்த வாய்ப்பு உங்களுக்கு கிடைத்ததா?', 'உங்கள் காலணி மிக அழகாக இருக்கிறது, எங்கே வாங்கினீர்கள்?', 'நீங்கள் ஒன்றும் பேச வேண்டாம், சிரித்துக்கொண்டு அருகில் நின்றால் போதும்.'

இந்தியா என்றில்லை. உலகெங்கிலும் ஆண்களுக்குத் தாழ்ந்தவராகவும், திறமை குறைந்தவர்களாகவும், அறிவு குறைந்தவர்களாகவும்தான் பெண்கள் பார்க்கப்படுகிறார்கள். 1976 இல்தான் அயர்லாந்து பெண்களுக்கு வீடு வாங்கும் உரிமை கிடைத்தது. 1978 ஆம் ஆண்டுதான் அமெரிக்காவில், பெண்கள் கர்ப்பமானால் பணியிடை நீக்கம் செய்யக்கூடாது என்ற சட்டம் பிறந்தது. 1981 இல்தான் ஆஸ்திரேலியாவில் பெண்களின் விருப்பமின்றி கணவன் உறவு கொள்ளத் தடை பிறப்பிக்கப்பட்டது. 2018 இல்தான் சவூதி அரேபியாவில் பெண்கள் வாகன ஓட்டும் உரிமை வழங்கப்பட்டது. 2019 இல்தான் வியட்நாம் பெண்கள், தாங்கள் பணி செய்யத் தடை செய்யப்பட்ட 77 வேலைகளில் பணியமர்த்தப்பட்டார்கள். 2024ல் தான் உலக நாடுகளில் முதன்முறையாக பிரான்ஸ் கருக்கலைப்பு உரிமையை தங்கள் அரசியமைப்பில் கொண்டுவந்தார்கள். உலகில் பல நாடுகளில் பெண்களுக்கு ஓட்டுரிமை கிடைத்ததைதே பெரும் போராட்டங்களுக்கு பின்னர்தான்.

இன்றளவும் ஆஸ்திரேலியாவின் பல நிறுவனங்களில் பெண்கள் ஆண்களுக்குச் சரி பாதியாக இருக்கவேண்டும் என்ற கொள்கையை வகுத்துள்ளது, முன்னேறியதாக சொல்லப்படும் நாடுகளில் பெண்களின் நிலையைக் காட்டுகிறது. ஆஸ்திரேலியா ஒன்றிய அரசுப் பணிகளில் இருக்கும் ஆண் பெண் விகிதாசாரம், ஒவ்வொரு ஆண்டும் கணக்கெடுக்கப்படுகிறது. அதில் நுழைவு நிலையில் 60ூக்கும் மேல் பெண்களே இருக்கிறார்கள். பணிநிலை மேலே உயர உயர , பெண்களின் சதவிகிதம் குறைந்துகொண்டே செல்கிறது. மேல்நிலைப் பணிகளில் பெண்களின் விகிதாச்சாரம் வெறும் 30ூ தான் இருக்கிறது. இது தரும் செய்தி, பெண்கள் அதிக அளவிற்கு வேலைக்கு வந்தாலும், பணி உயர்வு அவர்களுக்கு மறுக்கப்படுகிறது என்பதே. பணிக்குச் செல்லும் பெண்கள், அது எந்த பணியாயினும், எதிர்கொள்வதில் அதிக சிக்கல்கள் உள ளன.

(7ஆம் பக்கம் பார்க்க...)

# காகிதப்புலி என விமர்சித்த அமெரிக்க அதிபர் டிரம்ப்: பதிலடி கொடுத்த ரஷ்யா!



உக்ரைனுக்கு எதிராக 2022ம் ஆண்டு ரஷ்யா போர் தொடுத்தது. போரானது மூன்றரை ஆண்டுகளை நிறைவு செய்தும் தொடர்ந்து நீடித்து வருகிறது. உக்ரைனுக்கு அமெரிக்கா ஆதரவு கரம் நீட்டி வருகிறது. ரஷ்யாவுக்கு, நட்பு நாடான வடகொரியா, ராணுவ தளவாடங்கள் மற்றும் வீரர்களை அனுப்பி மறைமுக உதவி செய்கிறது என கூறப்படுகிறது. போரை நிறுத்த அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் மற்றும் ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் பலருடனும் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி தொடர்ந்து பேசி வருகிறார். ஆனால், ரஷ்யா வோ போரை நிறுத்தும் முடிவுக்கு வரவில்லை. அதற்கான பேச்சுவார்த்தையிலும் உடன்பாடு ஏற்படவில்லை. உக்ரைனின் ஐந்தில் ஒரு பங்கு நிலப்பரப்பை ரஷ்யா ஆக்கிரமித்து உள்ளது. இந்த சூழலில், ஐ.நா. பொதுச்சபையின் கூட்டத்தில் பங்கேற்று டிரம்ப் பேசினார். அதன் ஒரு பகுதியாக, உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியையும் சந்தித்து பேசினார். அப்போது அவர், ரஷ்யா பலவீனத்துடன் உள்ளது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி அது கைப்பற்றிய அனைத்து பகுதிகளையும் திரும்ப எடுத்து கொள்ள வேண்டும் என ஜெலன்ஸ்கியுடன் பேசும்போது டிரம்ப் கூறினார். ஐரோப்பிய யூனியனுடன் இணைந்து தன்னுடைய பகுதிகளை உக்ரைன் திரும்ப எடுத்து கொள்ளும். அதற்காக போரிட்டு வெற்றி பெறும் என நினைக்கிறேன் என்றும் டிரம்ப் நம்பிக்கை வெளியிட்டார். தொடர்ந்து அவர், உண்மையான ராணுவ அதிகாரம் கொண்ட எந்த ஒரு நாடும் போரில் வெற்றி பெறுவதற்கு ஒரு வாரம் போதும். இப்படி மூன்றரை ஆண்டுகளை எடுத்து கொள்ளாது. இதனால் ரஷ்யா ஒன்றும் தனித்துவ நாடு அல்ல. உண்மையில், அவர்கள் ஒரு காகிதப்புலி போன்று இருக்கிறார்கள் என கிண்டலாக கூறினார். இதற்கு பதிலடி கொடுத்த ரஷ்யா, பல தடைகளை விதித்தபோதும், பொருளாதார ரீதியாக நாங்கள் நிலைத்து நிற்கிறோம். ரஷ்யா ஒன்றும் காகிதப்புலி அல்ல. ஆனால், நாங்கள் உண்மையான கரடி என்று தெரிவித்து உள்ளது. ரஷ்யாவின் செய்தி தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் இதனை மறுத்ததுடன், ஜெ கூறிய விசயங்களை கேட்டு விட்டு டிரம்ப் கூறுகிறார். அந்த வகையில் ஆய்வு செய்து விட்டு அவர் இப்படி கூறியுள்ளார். உக்ரைனில் ரஷ்யா ராணுவம் தொடர்ந்து முன்னேறி வருகிறது என்றும் அவர் தெளிவுப்படுத்தி உள்ளார். கட்டுப்பாடுகள் மற்றும் தடைகள் விதித்தபோதும், அதனை தகர்த்து முன்னேறுகிறோம். எங்களுடைய தாக்குதல் திறனை குறைத்து மதிப்பிட வேண்டாம். அவை ஆழ்ந்து சிந்தித்து எடுக்கப்பட்ட முடிவுகள் என கூறியுள்ளார். (ஐ)

## நோபல் பரிசு வேண்டுமெனில் காசா போரை ட்ரம்ப் நிறுத்த வேண்டும்



அமெரிக்கா அதிபர் ட்ரம்பிற்கு அமைதிக்கான நோபல் பரிசு வேண்டுமென்றால், காசா போரை நிறுத்த வேண்டும் என்று பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான் தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் நியூயார்க்கில் பிரான்ஸ் தொலைக்காட்சிக்கு பேட்டி அளித்த மேக்ரான், “ஐ.நா. சபை பொதுக்கூட்டத்தில் காசாவில் அமைதி திரும்ப வேண்டுமென ட்ரம்ப் வலியுறுத்தினார். காசா மீதான போரை முடிவுக்கு கொண்டு வர இஸ்ரேலுக்கு அமெரிக்க அதிபர் ட்ரம்பால் அழுத்தம் தர முடியும்.


காசா மீது போரை நடத்துவதற்கு அமெரிக்கா ஆயுதங்களையும், உபகரணங்களையும் வழங்குகிறது. அமெரிக்காவுக்கு மட்டுமே காசா போரை முடிவுக்கு கொண்டு வரும் ஆற்றல் உள்ளது. ஏற்கனவே ஏழு போர்களை முடிவுக்கு கொண்டு வந்துள்ளதாக பெருமிதம் தெரிவிக்கும் ட்ரம்ப், காசா போரை நிறுத்த வேண்டும். காசா போரை நிறுத்தினால் மட்டுமே அமெரிக்க அதிபர் ட்ரம்பிற்கு அமைதிக்கான நோபல் பரிசு கிடைக்கும்,”இவ்வாறு தெரிவித்தார். (ஐ)



## தைவானை புரட்டிப்போட்ட ‘ரகாசா’ புயல் 14 பேர் பலி


தைவானை அதிதீவிர சக்தி வாய்ந்த ரகாசா புயல் தாக்கியது. புயல் காரணமாக இடைவிடாமல் தொடர்ந்து மழை பெய்தது. பெரும்பாலான பகுதிகள் வெள்ளக்காடாகி உள்ளன. பல இடங்களில் குடியிருப்புகள் மழை நீரால் சூழப்பட்டுள்ளது. சீ இதுவரை சுமார் 10லட்சம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர். வெள்ளத்தில் இருந்து தப்பிக்க முடியாத முதியவர்கள் உட்பட 14 பேர் உயிரிழந்ததாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஐநா தலைமையகத்தில் அதிபர் டிரம்ப் ஏறியதும் எஸ்கலேட்டர் நின்றது ஏன்? நிதியை நிறுத்தியதற்காக பதிலடியா?



நியூயார்க்கில் நடந்து வரும் ஐநா பொதுச் சபையின் 80வது அமர்வு கூட்டத்தில் பங்கேற்க அமெரிக்க அதிபர் டிரம்ப் தனது மனைவி மெலனியா உடன் நேற்று முன்தினம் ஐநா தலைமையகத்திற்கு வந்தார். இருவரும் எஸ்கலேட்டரில் கால் வைத்த உடனே திடீரென அது நின்று போனது. பின்னர் டிரம்ப், மெலனியா இருவரும் படிக்கட்டில் நடந்தே மேலே சென்றனர். இதைத் தொடர்ந்து, பொதுச் சபை அமர்வில் அதிபர் டிரம்ப் உரையாற்ற சென்ற போது, அங்கு டெலிப்ராம்ப்டர் வேலை செய்யவில்லை. இதனால் பேப்பரில் எழுதி வைத்ததை பார்த்து டிரம்ப் வாசித்தார். தனது உரையிலேயே ஐநாவை வறுத்தெடுத்தார்.

இதற்கிடையே, ஐநா அளித்த விளக்கத்தில், “ எஸ்லேட்டரில் இருப்பவர்கள் தவறி விழுந்தாலோ அது தானாக நின்றுவிடும் தொழில்நுட்பம் கொண்டது. வீடியோகிராபர் பின்பக்கமாக நடந்ததால் அந்த தொழில்நுட்பம் காரணமாக எஸ்கலேட்டர் நின்றிருக்க வாய்ப்புள்ளது” என்றார். ஆனாலும் “எஸ்கலேட்டரை யாராவது வேண்டுமென்றே நிறுத்தியிருந்தால், அவர்கள் உடனடியாக பணிநீக்கம் செய்யப்பட்டு விசாரிக்கப்பட வேண்டும்” என்று வெள்ளை மாளிகையின் பத்திரிகை செயலாளர் கரோலின் லீவிட் எச்சரித்துள்ளார். ஐநாவுக்கு வழங்கிய நிதியை டிரம்ப் நிறுத்தியதால் எஸ்கலேட்டரையும் ஊழியர்கள் யாராவது நிறுத்தியிருக்கலாம் என்ற பத்திரிகை செய்தியையும் லீவிட் சுட்டிக்காட்டினார். (ஐ)



## பாக். பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் வாஷிங்டன் பயணம்

*ஐக்கிய நாடுகள் பொதுசபையின் 80வது கூட்டம் நியூயார்க் நகரில் தொடங்கி நடந்து வருகிறது. இதில் கலந்து கொள்வதற்காக பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீஃப் நியூயார்க் நகருக்கு சென்றுள்ளார். இந்நிலையில், அமெரிக்க அதிபர் டிரம்ப்பை சந்திப்பதற்காக பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீஃப் வாஷிங்டன்னுக்கு செல்ல உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. வெள்ளை மாளிகையில் அதிபர் டிரம்ப்பை சந்திக்கும் ஷெபாஸ் ஷெரீஃப், அமெரிக்கா பாகிஸ்தான் உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து விவாதிக்க உள்ளதாக கூறப்படுகிறது.*

## பொலிஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒருவர் உயிரிழந்துள்ளார். நிட்டம்புவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரிவுக்குட்பட்ட கொழும்பு - கண்டி பிரதான வீதியில் நம்புலுவ சந்திக்கு அருகில் நேற்று புதன்கிழமை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநரான பொலிஸ் கான்ஸ்டபிள் பலத்த காயமடைந்து வத்துபிட்டிவல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். வரக்காபொல, மஹேனகமவைச் சேர்ந்த 33 வயதுடைய பொலிஸ் கான்ஸ்டபிளே உயிரிழந்துள்ளார். சடலம்வத்துபிட்டிவல வைத்தியசாலை யின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

லொறியின் சாரதி, பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். நிட்டம்புவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பொலிஸ் விசேட.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி இடம்பெறுகின்றது எனப் பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய, சந்தேகநபரை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் நேற்று கைது செய்யச் சென்றபோது, அவர் தப்பிச் செல்ல முற்பட்டு கிணற்றில் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இராமநாதபுரம் பகுதியில் வசிக்கும் ஒரு பிள்ளையின் தந்தையான இளம் குடும்பஸ்தரே (வயது 24) இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பாக இராமநாதபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 7 பௌத்த..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலத்தில் மதச் சடங்குகளை முடித்துவிட்டு மலை உச்சியில் உள்ள தியான மண்டபத்துக்குப் பிக்குகள் திரும்பிக் கொண்டிருந்தபோது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கேபிள் காரின் கம்பி அறுந்ததால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. உயிரிழந்த பிக்குகளில் இருவர் வெளிநாட்டுப் பிரஜைகள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

.விபத்து இடம்பெற்ற நேரத்தில் 13 பிக்குகள் கேபிள் காரில் இருந்தனர் எனக் கூறப்படுகின்றது. விபத்தின்போது கேபிள் காரில் இருந்து குதித்த இரண்டு பிக்குகள் சிறு காயங்களுடன் உயிர் தப்பினர். படுகாயமடைந்த 4 பிக்குகள் குருநாகல் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

உயிரிழந்த பிக்குகளின் சடலங்கள் குருநாகல் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## லொறி-வான்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒன்றும் வான் ஒன்றும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் நால்வர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில் மூவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இன்று அதிகாலை இந்தக் கோர விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அனுராதபுரத்தில் இருந்து குருநாகல் நோக்கிச் சென்று கொண்டிருந்த லொறியும், குருநாகலில் இருந்து அனுராதபுரம் நோக்கிச் சென்று கொண்டிருந்த வானும் நேருக்கு நேர் மோதியே இந்தக் கோர விபத்து இடம்பெற்றுள்ளது. வானின் சாரதி மற்றும் லொறியின் சாரதி உட்பட ஏழு பேர் படுகாயமடைந்த நிலையில் தலாவ மற்றும் அனுராதபுரம் வைத்தியசாலைகளில் சேர்க கப்பட்டனர். அவர்களில் வானில் பயணித்த நால்வர் உயிரிழந்தனர். இந்த விபத்து தொடர்பில் தலாவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தொடர்...

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின்போது நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட விவகாரங்களுக்கு நீதி வேண்டியும், உள்நாட்டுப் பொறிமுறையை நிராகரித்தும், சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும், செம்மணி விவகாரத்துக்கு நீதி கோரியும் இந்தப் உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் போராட்டத்தில், வடக்கின் ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டுள்ள நிலையில், போராட்டத்தின் ஆரம்பத்தில் தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படத்துக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. போராட்டத்தில் பங்கேற்றுள்ளவர்கள், உள்நாட்டுப் பொறிமுறையை நிராகரிக்கின்றோம், தமிழின அழிப்பு, காணாமல் ஆக்கப்பட்டமை, போர்க்குற்றங்கள் மற்றும் மனிதப் புதைகுழிகள் குறித்து நாம் சர்வதேச சுயாதீன விசாரணையை மட்டுமே கோருகின்றோம் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

# நாட்டிற்கு ஒரு தெளிவான பயனுள்ள திட்டமொன்று அவசியம்!



கொழும்பு, செப் .25

அரசாங்கம் நுண் பொருளாதாரம், பேரண்ட பொருளாதாரம் குறித்து சிந்திப்பது போலவே, தனிநபர்கள், குடும்பங்கள், தொழில்முனைவோர் மற்றும் வியாபாரிகள் தொடர்பிலும் சிந்திக்க வேண்டும். இன்றும் கூட, நுண் பொருளாதாரத்தில் தனிநபர், சமூகம் மற்றும் குடும்ப அலகுகள் அழுத்தங்களைச் சந்தித்து வருகின்றன. அரசாங்கம் ஏற்றுமதிக்கு உகந்த கொள்கையைப் பின்பற்றினால், சர்வதேச நாணய நிதியத்தின் தாளத்திற்கு ஆடி ஒக்டோபர் 1 முதல் இலகுபடுத்த ப்பட்ட பெறுமதி சேர் வரி முறைமை (SVAT) ஐ நீக்குவது ஏன் என்ற கேள்வி எழுகிறது. தேர்தலின் போது வாக்குறுதியளித்த பிரகாரம், புதிய ஐஆகு இணைக்கப்பாடு எட்டப்பட்டிருந்தால் ஏற்றுமதிக்கு உகந்த ஏஏயுவு தக்கவைக்கப்பட்டிருக்கலாம் என்றாலும், அது இன்று நீக்கப்படும் நிலையே காணப்படுகின்றது. விநியோகஸ்தர்களிடமிருந்து ஏயுவு அறவிடுவதற்குப் பதிலாக, ஏஏயுவு இன்வாய்ஸ் வழங்கப்படுகிறது. ஏற்றுமதியாளர்கள் குறித்து கவலை இருந்தால், ஐஆகு விதிமுறைகளின் பேரில் இவை ஏன் நீக்கப்படுகின்றன என்பதில் பிரச்சினை காணப்படுகின்றன என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஏற்றுமதித் துறை தொடர்பாக பாராளுமன்றத்தில் இன்று (25) நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இது ஏற்றுமதியாளர்களுக்கு பணப்புழக்க சிக்கலை உருவாக்குகின்றமை இதன் பாதக அம்சமாக காணப்படுகின்றன. தாமதங்கள் நேரத்தை வீணடிக்கும், செயல்திறனைக் குறைக்கும், நிர்வாகச் செலவுகளை அதிகரிக்கும், ஏற்றுமதித் துறையில் போட்டியிட வாய்ப்புள்ள பிற நாடுகள் இந்தப் பிரச்சினையில் விரைந்து செயல்படும் நிலை எமக்கு பாதகமாக அமையும். நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோர்களுக்குக் கூட மூலதனப் பிரச்சினைகளை இது உருவாக்கும்.

ஏயுவு இணைக்கத்தையும் வரி அறவீட்டையும் அடைவதை நோக்கமாகக் கொண்ட ஒரு நிபந்தனையை IMF 2024 ஜூன் விதித்துள்ளது. காலாண்டுக்கு ஒருமுறை பெற்றுத் தரும 2.9 பில்லியனுக்கும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக, நமது நாட்டில் ஏற்றுமதியாளர்கள் கடுமையான பிரச்சினையை எதிர்கொள்கின்றனர். இறுதி நேரத்திலேனும் ஐஆகு உடன்கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறும், டிஜிட்டல் மயமாக்கல் நிறைவுறும் வரையும் இதை ஒத்திவைக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்தார்.

கடந்த காலங்களில் நாட்டின் வங்குரோத்து நிலை காரணமாக 260,000 தொழில்முனைவோர் சிரமத்திற்கு ஆளானார்கள். இப்போதாவது சர்வதேச நாணய நிதியத்தின் தாளத்திற்கு ஆடாமல் செயல்படுமாறு நாம் அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறோம். அமைச்சரால் முன்வைக்கப்படும் நம்பிக்கையான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஒருபோதும் கபட அரசியலில் ஈடுபட மாட்டோம். இரண்டு காலாண்டுகளாக பொருளாதார வளர்ச்சி இலக்குகளை தாண்டியது மகிழ்ச்சி அளிக்கிறது.

2028 முதல் ஆண்டுதோறும் 5.5 பில்லியன் டொலர் வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்த அரசாங்கம் தயார் நிலையிலா இருக்கிறது என நாம் கேள்வி எழுப்புகிறோம். முந்தைய அரசாங்கம் இணக்கப்பாடு கண்ட ஐஆகு ஒப்பந்தத்தைப் அவ்வாறே பின்பற்றாமல் மீண்டும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தால், 2033 ஆம் ஆண்டிலிருந்தே கடனை திருப்பிச் செலுத்தும் நிலைக்கு வந்திருக்கலாம்.

நமது நாட்டில் சுமார் 50 சதவீதம் ஆனோர் பல்வேறு வகையான வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளதாக பல நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. நுகர்வு, வருமானம், உற்பத்தி மற்றும் முதலீடு ஆகிய வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஐக்கிய நாடுகள் பொதுச் சபை கூட்டத்தொடரில் வறுமை தொடர்பில் ஜனாதிபதி பேசியது நல்ல விடயமாகும். என்றாலும், அஸ்வெசும மூலம் வறுமை ஒழிக்கப்படாது. அஸ்வெசும நுகர்வை மட்டுமே நோக்கமாகக் கொண்டதாகும். ஏற்றுமதி, உற்பத்தி அல்லது சேமிப்பு எதுவும் இதில் அடங்கவில்லை. இது சிரமங்களை அனுபவிக்கும் மக்களுக்கு நுகர்வுக்கான நிதிசார் வசதியை பெற்றுக் கொடுப்பதற்காக மட்டுமே வழங்கப்பட்டு வருகின்றன. எனவே வறுமையை ஒழிப்பதற்கு நாட்டிற்கு ஒரு தெளிவான பயனுள்ள திட்டமொன்று அவசியம் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (ஐ)

# நேற்று மாயமான குடும்பஸ்தர் இன்று காலை சடலமாக மீட்பு!

நுவரெலியா மாவட்டம், லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வலஹா தோட்டத்தில் இருந்து நேற்று காணாமல்போன குடும்பஸ்தர் இன்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். வலஹா தோட்டத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கா.கிருஷ்ணசாமி (வயது 70) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று பிற்பகல் 2 மணியளவில் காணாமல்போன இவரை உறவினர்கள் மற்றும் தோட்ட மக்கள் இணைந்து தேடியபோது, இன்று காலை தேயிலைத் தோட்டப் பகுதியில் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் லிந்துலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# எந்த நாடும் .........

கட்டுமானப் பணிகளில் ஈடுபடும் பெண்கள் மிகக் குறைவு. அப்படி ஈடுபடும் பெண்களுக்கு என்று தனி கழிப்பறைகூடக்கிடையாது. ஆண்கள்கழிப்பறையைத்தான் உபயோகிக்க வேண்டும். இதுவே பெண்களுக்கு ஒரு பெரிய தடைகல்தான். பணி நேர்காணலில், ஒரு ஆண், ஒரு பெண் சம அளவிற்கு தகுதி பெற்றிருந்தாலும், அந்த வாய்ப்பு பெரும்பாலும் ஆண்களுக்கே வழங்கப்படுகிறது. காரணம், அந்தப் பெண் எதிர்காலத்தில் மகப்பேறு விடுமுறை எடுக்கும் வாய்ப்பு இருப்பதினால இப்படி எல்லா துறைகளிலும் ஏற்றத் தாழ்வுகளைச் சந்தித்துதான் பெண்கள் சாதிக்கிறார்கள்.

பின்தங்கிய நாடான ஆஃப்கானிஸ்தானின் தலிபான் அரசு, பெண்கள் அழகு நிலையங்களை மூட ஆணை பிறப்பித்தது. பெண்கள் எழுதிய நூல்களுக்கும் அங்கே தடை. வளர்ந்த நாடுகளிலோ இன்றும் தரையை சுத்தம் செய்ய, அடுப்படியைச் சுத்தம் செய்ய, குழந்தைகளுக்கு மதிய உணவு தயார் செய்ய என்று வரும் விளம்பரங்களில் பெண்கள்தான் முன்னிலைப்படுத்தப்படுகிறார்கள். உலகின் வல்லரசான அமெரிக்காவில், இன்றும் கருக்கலைப்பு உரிமைக்காக, பெண்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

வளர்ந்த நாடுகளில் பெண்களின் நிலை இதுவென்றால், இந்தியாவில் கேட்கவே வேண்டாம். நூறு வருடங்களுக்கு முன் பெண்கள் எதற்காகவெல்லாம் போராடினார்களோ, அதிலிருந்து எவ்வளவு தூரம் முன்னேறி இருக்கிறார்கள் என்பதே கேள்விக்குறி. அன்றைய காலகட்டத்தைவிட இப்போது பெண்கள் கல்வியிலும் வேலைவாய்ப்புகளிலும் பெருமளவிற்கு முன்னேறி இருக்கிறார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. ஆனால் அவை பெண் விடுதலையில் வருமா என்பதுதான் கேள்விக்குறி. இன்றளவும் எந்தத் துறை கல்வி, எந்தத் துறை வேலை என்பதை அநேக பெண்களின் வீடுகளில் இருப்பவர்கள்தான் முடிவெடுக்கிறார்கள்.

பெண் விடுதலை என்பது சுய சிந்தனையில் பிறக்கும் அறிவிலிருந்து மேற்கொள்ளப் படும் செயல். கடந்த நூறு ஆண்டுகளில் அறிவியல் வளர்ச்சி அடைந்த அளவிற்குகூட, பெண் விடுதலை வளர்ச்சி அடையவில்லை என்பதே நிதர்சனம்.

ஒரு தேசம் எவ்வளவு முன்னேறி இருக்கிறது என்பதை அந்த நாட்டு பெண்களின் முன்னேற்றத்தை வைத்தே அளவிட வேண்டும் என்று அம்பேத்கர் சொல்வார். அந்த அளவுகோள் கொண்டுபார்த்தால், உலகில் எந்த நாடுமே இன்னும் முன்னேறவில்லை என்றுதான் சொல்லவேண்டும்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.09.2025 வெளியிடப்பெற்றது.